ARAN International e-Journal of Tamil Research

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



**காலாண்டு இதழ்**
**(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)**
**ஆகிய மாதங்களில் வெளிவரும்**

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

*+917299587879*

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# *Exploring the Boy's Quest in Joe D Cruz's Yathirai: The Dynamics Between Catholicism and Ancestral Traditions*

***Dr Hebzibah Beulah Suaganthi TR**, AssistantProfessor,Deparment of Tamil, Faculty of Science and Humanities, SRM IST, Kattankulathur - 603 203*

***Abstract:***

*The narrative of Yathirai explores the way of life of coastal communities. The author, who holds a postgraduate degree in economics and has worked in the commercial shipping industry, has lived among maritime communities since childhood and has documented his experiences and reflections in Yathirai as a journey of discovery. His novels Korkai and Aazhisool Ulagu have established him as a prominent writer on the global stage. This particular work critiques the lifestyle of Tamil Catholic Christians, highlighting that even after conversion, the ancestral reverence for local Neithal deities and the remnants of their original faith persist deeply in their memories. The author argues that the adoption of foreign (Christian) cultural practices, rather than retaining their traditional Tamil customs, reflects a lack of awareness that needs to be addressed. He criticizes the Catholic practice of confession as an example of this ignorance and advocates for the reformation and revitalization of Tamil cultural heritage, which is clearly expressed in the narrative's quest.*

***Keywords:** Cultural Identity, Catholicism, Confession, Foreign vs. Domestic Idolatry, Ancestral Beliefs.*

# ஜோ டி குருஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்

**முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, அறிவியல் மற்றும் கலையியற்புலம், எஸ்ஆர்எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், காட்டாங்குளத்தூர்-603203.

**ஆய்வுச் சுருக்கம்:**

யாத்திரைப் புதினம் கடல்வாழ் மக்களின் வாழ்வியலை விளக்குகிறது. பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் வணிக கடப்பல் நிறுவனத்தில் பணி செய்தவர். கடலிலே பயணித்து சிறு பருவம் முதல் கடலிலே கடல் வாழ் மக்களுடன் வாழ்ந்த இவர் தம்

*வாழ்வியலைச் சிறுவனின் தேடலாக யாத்திரை புதினத்தில் பதிவு செய்துள்ளார்.கொற்கை, ஆழிசூழ் உலகு இரண்டு புதினங்களும் இவரை எழுத்தாளராக உலகிற்கு அடையாளம் காட்டியுள்ளன. இப்புதினம் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் வாழ்வியலை விமர்சனம் செய்கிறது.நெய்தல் நில ஆதி தமிழ் குடிமக்கள் கிறிததவத்திற்கு மாறினாலும் அவர்களின் நினைவு அடுக்குகளில் ஆழ் மனதில் நெய்தல் நிலத் தெய்வத்தின் மீதான நம்பிக்கையும் பூர்வீக மதத்தின் மீதான நினைவுகளும் அவர்கள் மனதில் நிரம்பியிருக்கிறது. கிறித்தவர்களாக மாறினவர்கள் தங்கள்பாரம்பரிய பண்பாடுகளைப் பழக்க வழக்கங்களை பின்பற்றாமல் பிற நாட்டுப் பண்பாட்டையும் தங்களுக்குரிய வாழ்க்கையாகும் கொண்டு வாழ்வது இவர்களது அறியாமை;இந்நிலை மாறவேண்டும். . கத்தோலிக்கக் கிறித்தவர்களின் பாவ சங்கீர்த்தனம் செய்தல் மக்களின் அறியாமை என்கிறார் குருஸ். தமது பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதற்கான சிந்தனைகள் சிறுவனின் தேடலில் வெளிப்பட்டுச் சிறக்கிறது.*

**திறவுச் சொற்கள்:** *கலாச்சார அடையாளம், கத்தோலிக்கம், பாவசங்கீர்த்தனம், ஆதி நம்பிக்கைகள், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வழிபாடு*

**முன்னுரை:**

நெய்தல் நில ஆதி தமிழ்க்குடி மக்களின் வாழ்வியலை எழுதி தமக்கென ஒரு தனித்துவத்தைப் பெற்றிருப்பவர் ஆர்.என்.ஜோடி குருஸ் ஆவார். திருநெல்வேலி மாவட்டம் உவரியில் பிறந்த இவர் கள்ளிகுளம் நாடார் கல்லூரியில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பையும் சென்னை லயோலா கல்லூரியில் எம்.ஏ.முதுகலைப் பட்டப் படிப்பையும் முடித்தவர். வணிகக் கப்பல் நிறுவனத்தில் பணி புரிந்து வருபவர். கடற்கரை மக்கள் வாழ்க்கையையே பொருளாகக் கொண்டு எழுத்துலகில் தடம் பதித்த இவரது **ஆழி சூழ் உலகு** 2004ஆண்டு **தமிழக அரசின் விருதையும் கொற்கை** 2009 ஆம் ஆண்டிற்கான **சாகித்ய அகாதமியின் விருதையும்** பெற்றது. சிறந்த கலை ஆளுமைகளுக்காக இவர் 2024 ஜனவரியில் **பத்மஸ்ரீ விருது** பெற்றவர்.

**படைப்புக்கள்:** இவரது படைப்புகளாக ஆழிசூழ் உலகு (2004), கொற்கை (2009), அஸ்தினாபுரம் (2016), யாத்திரை (2021) என்ற நான்கு புதினங்களும் கவிதை நூல்களாக புலம்பல்கள்( 2004) வேர்பிடித்த விளைநிலங்கள், தன் வரலாறு (2017) என்ற கவிதை நூல்களும் விடியாத பொழுதுகள்(Towards Dawn),எனது சனமே,இனையம் கள நிகழ்ச்சிகள் என்ற ஆவணப்படங்களும் கவனம்தேடும்கடலோரம்(2019), படைப்புக்களின் உரையாடல்(2020) என்ற கட்டுரை நூல்களும் இவரது படைப்புகளாகும். இவ்வாய்வுக் கட்டுரை யாத்திரை

புதினத்தில்சிறுவனின் தேடல்களை (நெய்தல் நில ஆதி தமிழ் குடிகளின் வாழ்வியலை) ஆராய்கிறது.

**யாத்திரை:**

கடலோர மக்கள் வாழ்வில் இருந்து பெற்ற பூர்வீக அறிவை அழித்து அதன் மேல் இறுகியதும் சுரண்டல் குணம் கொண்டதுமான பண்பாட்டை கட்ட மத நிறுவனங்கள் முயல்கின்றன. இந்த பண்பாட்டு படை எடுப்பில் இருந்து தப்பி தனது முன்னோர் மரபைக் கண்டுவிடத் துடிக்கும் சிறுவனின் தேடல்கள் அவனது முதுமையிலும் அயராமல் தொடர்கிறது. முன்னோர்களைப் புனிதர்களாகவும் இயேசு என்ற இறைமகனைத் தன்னைப் போன்ற எளிய மனிதனாகவும் சர்வேஸ்வரனாகவும் சிறுவன் இனம் காண்கின்றான். இதுவே புதினத்தின் மைய இழை. கடலோர வாழ்விலும் பண்பாட்டிலும் மொழியிலும் மூடுண்டு கிடக்கும் துன்பங்களின் எச்சங்களை விளங்கிக் கொண்டு மறுவாசிப்பு செய்கிறது இப்புதினம். யாத்திரை என்பதை நிறுவன மயமான ஆன்மீகத்துடன் இணைத்து புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் சூழலில் இந்த யாத்திரை கடலோர நாட்டார் தொன்மமான அழியாத தடங்களைக் கண்டெடுத்துக் காட்சிப் படுத்தியுள்ளது. புதினத்தின் தொடக்கத்தில் சிறுவனாகக் காட்சியளிக்கின்ற 'இவன்' அடுத்து வருகிற அத்தியாயங்களில் மெல்ல வளர்கிறான்; வளர்ந்து பெரியவன் ஆகிறான். மேலுமான வாழ்க்கையைச் சந்திக்கிறான். இது இயல்பானதே; ஆனால் இந்தச் சிறுவனின் வளர்தலில் ஒரு சமூகத்தின் பரிணாம வளர்ச்சியும் கூடவே காட்சியளிக்கிறது. இந்தியாவின் தென்கோடியில் கிழக்கும் மேற்குமாகப் பரவிக் கிடந்த தமிழ் ஆதிக் குடிமக்களான நெய்தல் நில மக்களில் பலர் தவிர்க்க முடியாத சூழலில் போர்த்துக்கீசியர்களால் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாக மாறுகிறார்கள். அதன் விளைவாக தங்களின் வாழ்வாதாரத்தையும் அன்று மீட்கிறார்கள். இது அவர்களுக்கு அன்றைய இருத்தலுக்கான தேர்வு. கால நீட்சியில் கிறித்தவத்திற்கு மாறினதால் ஏற்பட்ட விளைவு பண்பாட்டின் மீது படிந்து இனத்தின் வேர்களை அசைக்க தொடங்கிய போது ஒரு கொந்தளிப்பு ஏற்படுகிறது; ஒரு மதம் தீவிரமாக ஒரு இனத்தில் வேரூன்றுகின்ற பொழுது என்னவெல்லாம் நடக்கும் என்பதைப் புதினம் கோடிட்டுக் காட்டுகிறது. தனது இன அடையாளத்தோடு 'இவன்'கத்தோலிக்க மதத்தை எதிர்கொள்கிற போக்கு புதினத்தில் நடக்கும் முக்கியமான நிகழ்வாகும். இந்த நிகழ்வு தமிழ்ப் புதினப் பரப்பில் புதிய அலையைத் தோற்றுவிக்கிறது.

வெள்ளையர்களோடு அய்ரிஸ் இன மக்கள் ஒத்துப்போவதில்லை. அவர்களது மண்ணின் பண்பாடு கலாச்சாரம் சுயம்புவானது. மத நம்பிக்கையையும் அதனோடு இணைந்தே பயணிக்கும். இப்படியான இடமிருந்தே உலகில் எல்லா இடங்களிலும் மக்கள் தங்கள் இனம்

போற்றிப் பாதுகாத்த விழுமியமங்களையும் சேர்த்தே மத நம்பிக்கையும் வைத்திருந்தார்கள் அல்லது அவற்றை தக்க வைத்துக் கொள்ளப் போராடி இருப்பார்கள் எனலாம். இந்தியாவின் தென்கோடி வாழ் ஆதித் தமிழ்க் குடி மக்களின் இந்த நேர்மையான போராட்டத்தை ஜோடி குரூஸ் இப்புதினத்தில் எதிர்கொண்டிருக்கிறார். இந்த இடத்தை ஒரு யுகம் புரண்டு படுத்தது போல என்று குறிப்பிடுகிறார்.

**சிறுவனின் புரிதலில் மாற்றம்:**

கத்தோலிக்கக் கிறித்துவக் குடும்பத்தில் பிறந்து அந்நம்பிக்கையிலே வளர்க்கப்பட்ட சிறுவன் மனத்தில் சில கேள்விகள் எழுகின்றன. இக்கேள்விக்கு பதிலை உள்வாங்கியபடி சிறுவனின் வாழ்க்கை நகர்கிறது. மடக்கலப்பிள்ளை, வேப்பமரம், இளம் பாதிரியார்,முதிய பாதிரியார்,மூத்தோர் வாழ்வைப் பேசும் குடிகாரர், இவர்களது தொடர்பால் சிறுவனின் அடிப்படைப் புரிதல்களின் மீது அவன் மனதில் மறுபரிசீலனை நடக்கிறது. மூதாதையர் பற்றிய புரிதலோடும் கத்தோலிக்க மதக் கட்டமைப்பின் மீதான கேள்விகளோடும் வளர்ந்த சிறுவன் பெரியவன் ஆகிறான்.

**சிறுவனின் கேள்வி:**

யாரோ நாச்சியார் ஆத்தா பற்றி சொன்னார்களே! யார் அவள்? காற்றுக் கடலில் எப்படி அவளால் இவர்களைக் காக்க முடியும்? கடலில் சிரமப்படுபவர்களை மாதாவும் புனிதர்களும் தானே காப்பாற்றுவார்கள் என்று சிறுவன் மனதிற்குள் கேட்கிற கேள்விக்குரிய விடையைச் சிந்தித்துக் கொண்டே இருக்கிறான். குண திசையில் ஆதவன் உதிக்கும் முன் எழுந்து குட திசையில் குமரியைத் தொழுது வணங்கி என்ற அம்பா பாடலில் வரும் குமரி யார்?சந்தனமாரி யார்? என்ற கேள்விகள் சிறுவனின் மனதில் எழுகின்றன. இதற்கான விடைகளை மடக்கலப்பிள்ளையும் சன்னியாசியும் மேலும் மற்ற பாத்திரங்களும் தருகின்றனர். அவனது கனவின் வழியும் தேடலுக்கான விடை கிட்டுகிறது. அப்போது அச்சிறுவன் தனது வேர்களைப் பார்த்து விடுகிறான். புதினத்தில் வருகின்ற சிறுவன் ஒரு குறியீடு. அவன் அந்த இனத்தின் ஒட்டு மொத்தக் காலத்தையும் உள்வாங்கிய இடமிருந்து அதிர்கிறான். புதினக் கதை ஊடாக ஆதி தமிழ்க்குடி நெய்தல் நில மக்களின் வாழ்பரப்பையும் கடந்து வந்த கால நிகழ்சிகளையும் வாசகன் ஒரே நேரத்தில் பார்த்து விடுகிறான். சிறுவனின் பின்புலம் இனத்தின் பின்புலமாக வாசிப்பில் புரிந்து விடுகிறது.

**சமயமும் பண்பாடும்:**

மனித வாழ்வு என்னும் சக்கரத்தின் மைய அச்சாகத் திகழ்வது சமயம். இச்சமய வழிபாட்டில் சடங்குகள் பெரும்பங்காற்றுகின்றன. அதில் பங்கு பெறுவோர் அனைவரையும் ஒன்றுபட

வைக்கிறது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள அனைவரின் ஒன்றுபட்ட மனத்தின் வெளிப்பாடே அச்சமூகத்தவரின் சமயம் என்பார் தர்கைம். தொன்மை சமயம் முதல் இன்று வரை தோன்றிய அனைத்துச் சமய வழிபாட்டிலும் சடங்குகள் முக்கிய பங்கு வகிக்கிறன. சடங்குகள் மக்களை இணக்கமுறச் செய்கின்றன;ஒன்றுபட வைக்கின்றன; கருத்து வேறுபாடுகளை மறைக்கச் செய்கின்றன என்கிறார் பக்தவத்சல பாரதி.(பக்தவத்சல பாரதி; பண்பாட்டு மானிடவியல்;பக்.524-525) குமரி,நாச்சியார்,சந்தன மாரி ஆகிய மூன்று பெண் தெய்வங்கள் கடல்வாழ் மக்களின் நம்பிக்கையோடும் உணர்வுகளோடும் விரவி நின்ற தெய்வங்களாவர்.

தமிழ்ச்சூழலில் சமயமும் சாதியும் பண்பாடும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதபடிக்கு பிணைந்து ஆழமாக வேரூன்றியுள்ளது. கத்தோலிக்க கிறித்தவர்களாக மாறிய ஆதித் தமிழ்க்குடி மக்களின் சமய நம்பிக்கையில் அறியாமை காணப்படுகிறது.இவ்வறியாமை நீங்க வேண்டும் என்கிறார் புதின ஆசிரியர். ஒவ்வொருவரும் தான் சார்ந்திருக்கும் சமயமும் சாதியுமே மேன்மையானது என்ற கருத்தைக் கொண்டிருப்பர். போர்த்துக்கீசியர்களால் கிறிஸ்தவர்களாக மாறின ஆதி தமிழ்க் குடிமக்களான இவர்கள் தங்கள் முன்னோர் பின்பற்றிய முன்னோர் வழிபாடுகளை விட்டுவிட்டனர். கிறித்தவப் பாதிரிமார்கள் இவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி இவர்களை முன்னேற்றப் பாதையில் நடத்தாமல் தங்கள் அதிகாரத்தினாலும் சூழ்ச்சியினாலும் மக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றவர்களாகவே இருக்கின்றனர்.

சமாதானம் செய்து வைக்க வேண்டிய பாதிரிமார்களே கோயிலுக்குள் மக்களைப் பிரித்து சண்டையிடச் செய்து தங்கள் குற்றத்தை மறைக்கின்றனர். அன்று வழக்கமான ஞாயிறு பூசை முடிந்ததும் ஆலயத்துக்குள் பெரும் கூச்சலாய் இருந்தது. பாடகர் குழுவில் இருந்த ஒரு பெண்ணோடு பாதிரியாருக்குத் தொடர்பு இருப்பதாக அரசல் புரசலாக ஊரில் வேளம் இருந்தது. வலப்புற குருசங் கோயிலின் குட்டி பீடத்தில், சாந்தம் தவழும் முகத்தோடு இருந்த சகாய மாதாவின் உருவத்தைத் தொட்டு, "நான் மது குடிப்பதும் இல்லை, பிறர் மனைவியை நோக்குவதும் இல்லை" என சத்தியம் செய்த ஒருவர், இந்த ஊர்ல பாதிரியாருக்கு ஒரு நீதி, சாமான்யனுக்கு ஒரு நீதியா எனக் கேள்வி கேட்டார். அவரது கேள்வியை எதிர்பாராத சிலர் அவரைக் குண்டுக் கட்டாகத் தூக்கி அங்கிருந்து அப்புறப்படுத்த முயன்றார்கள். "இந்த சபையோட பொறுப்பாளர் யாரு, இந்த பாதிரியார் தான, அவரையும் மாதா நெஞ்சின் மேலே கை வைத்து சத்தியம் பண்ண சொல்லுங்க" என்று அவர் கத்தினார்.

" உன் ஞான மேய்ப்பர்கள் மேல் குற்றம் சுமத்தாதிருப்பாயாக, அவர்களது அதிகார வரம்பிற்குள் தலையிடாதிருப்பாயாகன்னு சட்டம் இருக்கு" என்றார் ஒரு பெரியவர். "அப்ப வேலியே பயிர மேய விடலாமா?"

" இதுக்குத்தான் இந்த ஊர்க் கட்சிக்காரர்களை இந்தச் சபையில் சேர்க்கக்கூடாதுன்னு சொல்லுறது". என்று ஞஅவர் சொல்லி முடித்திருக்கவில்லை, செவிட்டு வாக்கில் அவருக்கு படார் என அடி விழுந்திருந்தது. ஆலயத்துக்குள் ஒரே தள்ளுமுள்ளு... " நீயா, நானான்னு போட்டுப் பார்த்திரலாம்வே"...

இவர்கள் தங்களுக்குள் பிரிந்து சண்டை யிட்டுக் கொள்கின்றனர்.மறுநாள் நடந்த கலகத்தில் ஊர்க் கட்சிக்காரர்களும் பாதிரியார் கட்சிக்காரர்களும் கடுமையாக மோதி கொண்டார்கள். கலகம் செய்த அனைவருமே கடலோடிகள் மெனக்கடன்கள் யாரும் அந்த கலகத்தில் கலந்து கொள்ளவில்லை.அவரவர் சார்ந்த கட்சிகளுக்கு செலவுக்கு பணம் கொடுத்ததோடு சரி கலகத்தில் அதிர்ஷ்டவசமாய் கொலை ஏதும் விழவில்லை. ஆனால் வெகு காலமாக ஒற்றுமையாய் இருந்த ஊர் இரண்டு பட்டு கிடந்தது.( ப.50 - 52)இங்கு கிறித்தவர்களான இவர்கள் தங்கள் இனமக்களின் பண்பாட்டையும் பாரம்பரிய முறையையும் மறந்து நம்மினப் பெண்களைப் பாதுகாக்காமல் பாதிரியாரைக் காக்க தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

**சிலை வழிபாடு :**

கத்தோலிக்கக் கிறித்தவ தேவாலயத்தில் சிலைவழிபாடு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. குழந்தை இயேசு, சிலுவையில் அறையப்பட்ட இயேசு, உயிர்த்தெழுந்த இயேசு,மாதா, குழந்தை யேசுவுடன் மாதா, சூசையப்பர், சம்மனசுகள், மேலும் போர்த்துக்கீசியக் கிறித்துவப் பாதிரியார்களின் சிலைகள், ரோமனிய பிஷப் சிலைகள் எனப் பற்பல சிலைகளை கத்தோலிக்க மக்களான இவர்கள் வழிபடுகின்றனர். ஆனால் தங்கள் முன்னோர்களை வழிபடவில்லை. தங்கள் முன்னோர்களை வழிபடுவது பாவம் என் நினைக்கின்றனர். பிற நாட்டு கிறித்தவ முன்னோர்களை வழிபடுவது சரியானதா ? இந்நிலை மாற வேண்டும்.கிறித்தவத்திற்கு மாறிய இவர்கள் தங்கள் முன்னோர்களை வழிபடாமல் யாரோ ஒரு அந்நிய நாட்டுக் கிறித்தவ பாதிரி சிலையையும் ரோமாபுரி பிஷப் சிலையையும் வழிபடுகிறார்களே இந்நிலை மாற வேண்டும் என்கிறார்.தம் சொந்த முன்னோர்களை வழிபடுவது பாவம் என நினைக்கும் மக்கள் வேற்றுநாட்டு பாதிரியார், பிஷப் ஆகியோரின் சிலைகளை தெய்வமாக நினைத்து வழிபடுகின்ற ஆதிநெய்தல் நில மக்களின் அறியாமையை எண்ணி வருந்துகின்றார்.

இறந்து போன மூத்தோர் பற்றிய நினைவுகளைப் போற்றுவது நல்லது என்பது பற்றி மட்டும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தன் பிள்ளைகளுக்குப் புரிய வைத்தார். கண்ணுக்கு தெரியாத கடவுளிடம் நம்பிக்கை வைப்பதைக் காட்டிலும் தங்கள் வாழ்க்கைக்கான பாதையை நெறிப்படுத்திய முன்னோரை நினைத்து மதித்து வாழ்வதன் அவசியம் குறித்து அவர்களிடம் தொடர்ந்து பேசினார். மொழி, குடும்பம், சமூகம், தொழில்நுட்பம், வாழ்வாதாரம், நம்பிக்கை, சித்தாந்தம், அரசியல் எல்லாமே முன்னோர்களின் கொடை. கடவுள் இதுவரை நம் கண்முன்னே

தோன்றி அதிசயங்களைச் செய்ததில்லை, முன்னோர் செய்திருக்கிறார்கள். சிக்கலான சமூக அரசியல் பொருளாதார சூழல்களில் அவர்கள் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து அவர்களைக் கையெடுத்து கும்பிடுவதில் தவறில்லையே. நாம் நம் முன்னோரைக் கும்பிடுகிறோம் நம் தலைமுறைகள் நம்மை கும்பிடலாம் இதற்கும் கற்பனையான மத நம்பிக்கைகளுக்கும் தொடர்பு இல்லை (ப.123). இவ்விடத்தில் புதின ஆசிரியர் முன்னோர்களைக் கும்பிட வேண்டும்.கண்ணால் பார்க்காத கடவுளைச் சிலை அவடித்து வணங்குகின்றோம்.ஆனால் நம்மை உருவாக்கி வாழ்வதற்கு வழிகாட்டின நம் முன்னோரை ஏன் கடவுளாகப் பார்க்க மறுக்கிறோம் என்ற சிந்தனையைக் கிறித்தவ கத்தோலிக்க மக்களிடம் கேட்கிறார்.

**பாவசங்கீர்த்தனம் :**

கத்தோலிக்க் கிறித்தவ வழிபாட்டில் திருப்பலிக்கு முன்தினம் பாதிரியாரிடம் பாவமன்னிப்புச் சொல்லுதல் ஒரு சடங்காகவே நடக்கிறது. ஞாயிற்றுக்கிழமையில் திருப்பலியில் பங்கேற்க இருக்கும் கத்தோலிக்கக் கிறித்தவ மக்கள் பாதிரிமார்களிடம் சனிக்கிழமையில் பாவசங்கீர்த்தனம் செய்ய வேண்டும். சில வாரங்களில் அவன் பாவம் சங்கீர்த்தனம் சொல்வதற்காக பாவங்கள் இல்லாமல் திண்டாடுவான் (மேலது; 48). ஊரில் பலரும் பாவ சங்கீர்த்தனத்தை ஒரு சடங்காகவே கடந்து போகிறார்கள் என்று அவனுக்குத் தெரியும். அவனைப் பொறுத்த வரையில் பாவ சங்கீர்த்தனம் திருப்பலியில் பங்கு பெறுவதற்கான முன் கடமை அவ்வளவுதான். பாவ சங்கீர்த்தனம் செய்யாவிட்டால் திருப்பலியில் பங்கு கொள்ள முடியாது. அதற்காகவே பலரும் பாவ சங்கீர்த்தனத்தைச் செய்வது அவனுக்குத் தெரியும் ஒவ்வொரு முறை பாவம் அறிக்கை செய்த பிறகும் **'பாவம் என் பெரும் பாவமே'** என்று அழுது புலம்ப வேண்டியதிருக்கிறதே என்று வருந்தினான்.'எல்லாம் வல்ல இறைவனிடம் சகோதர சகோதரிகளே உங்களிடமும் நான் பாவி என்று ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில் என் சிந்தையாலும் சொல்லாலும் செயலாலும் கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன் **'என் பாவமே என் பெரும் பாவமே'** ஆகையால் எப்போதும் கன்னியான பரிசுத்த மரியாளையும் வான தூதர் புனிதர் அனைவரையும் சகோதர சகோதரிகளே உங்களையும் நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன்(ப.48).இவ்வாறு பாவசங்கீர்த்தனம் செய்வதை ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார்.

சில வாரங்களில் பாவ சங்கீர்த்தனம் செய்வதற்குப் பாவமே இல்லாமல் இருக்கிறது. அந்நிலையில் அம்மக்கள் பாதிரியாரிடம் பாவம் அல்லாததைப் பாவம் என்று அறிக்கை செய்கிறார்கள் அல்லது பாவ சங்கீர்த்தனம் செய்வதற்காகவே ஒவ்வொரு வாரத்திலும் பாவம் செய்கிறார்கள் என்று சொல்லலாமா? யாத்திரை புதினத்தில் உள்ள சிறுவனின் மனதில் '

பாவத்திற்காக இவர்கள் ஏன் மன்றாட வேண்டும்' என்ற கேள்வி எழுகிறது.(ப.48) கிறித்தவ வழிபாட்டில் இந்நிகழ்வு தேவையில்லை என்றே ஆசிரியர் நினைக்கிறார்.சிறுவனின் தேடலிற்கான பதில் அவனது கனவுகளின் வழியும் பேசாத இயற்கையும் பிற மனிதர்களும் இவனுடன் பேசுவதன் மூலமாகவும் கிடைக்கிறது.முன்னோர் வழிபாடு பற்றிச் சிறுவனது உள்ளத்தில் எழும் கேள்விக்கான விளக்கம் கனவுகளின் வழி அவனுக்குக் கிட்டுகிறது.

**நாச்சியார் வழிபாடு:**

புதினத்தில் மடக்களப்புள்ளை இக்கதையை சிறுவனுக்கு கூறுகிறார்." கூத்தத்துறையில அந்த காலத்துல ஒரு நாள் பேய் காற்று அடித்திருக்கு. கடல்லயும் பெருவெள்ளமாம் .தொடர்ந்து

அரநீவாடு ஓடினதனால வலையள்ள மச்சம் இல்லாமல் போச்சி. அந்த பேய் காற்றுலயும் மக்கள் தொழிலுக்குப் போய் இருக்காங்க. போனவங்க எல்லாருமே கை முறிஞ்சு, கால் முறிஞ்சு கரை சேர்ந்தாங்களாம். நாச்சியார் ஆத்தா பிள்ளைக மட்டும் இன்னும் திரும்பி வரக் காணும். ஆத்தா ஊர் சந்தியில் நின்று ஒப்பாரி வச்சிருக்கா. யாராலும் உதவி செய்ய முடியல. ஊர் மக்கள் எவ்வளவோ தடுத்தும் கேட்காம,' என் பிள்ளைகளை நானே காப்பாத்துறேன்'னு ஒத்த மனுஷியா கடல்ல கட்டுமரத்தை இறக்கிப் போனாளாம்"

"அவ தெய்வப்பிறவி, எப்படியோ கடல்ல பிள்ளைகளைக் கண்டுபிடிச்சி அவங்க கரை வாரா நேரம் திரும்பவும் கடும் புயல் எடுத்து இருக்குது பெரிய அலைகள் அடுக்கடுக்கா வந்துருச்சாம்."அய்யாமாரே நீங்க போங்க கடல் உயிர்ப்பலி

கேக்குது" ன்னு அவள் சொல்லி வாய் மூடி இருக்கவில்லை பேயலை ஒன்று வந்து அவளைச் சுழற்றி உள்ளிழுத்துக் கொண்டதாம். அவளைக் காப்பாற்ற முடியாத சோகத்தோடு அவ பிள்ளைக கரை திரும்புனாங்கலாம். அன்றிலிருந்து இன்று வரை கூத்தன் துறையில் அலை கடல் இல்லாமல் போச்சு,"

கூத்தன் துறையில ஆழியே இல்லாம போச்சி."

"அந்தக் குடும்பத்துப் பெயர் கங்கர். அவங்க இன்னும் கடற்கரையில அவளுக்கு அணையா விளக்கு போட்டு கும்பிடுறாங்க. அவளையும் நம்ம பாதிரிகள் பேய்னு சொல்றாங்க".

நாச்சியார் என்ற நம் முன்னோரை அவர்களின் பரம்பரையினர் குலதெய்வமாக வழிபடுகின்றனர்.

கத்தோலிக்கக் கிறித்தவர்கள் மட்டும் பாதிரியாரின் சொல்லைக் கேட்டுக்கொண்டு அவரை வழிபடுவதில்லை.

**முன்னோர் வழிபாடு:**

இறந்தவரின் ஆற்றல் வாழ்வோரின் நலனில் பெரும் பங்கு வகிக்கிறது என்னும் கருத்தாக்கத்தால் ஏற்பட்டதே முன்னோர் வழிபாடாகும். ஒரு பிறவியில் ஒருவர் பெறும் ஆற்றல் அவர் இறந்த பின்னும் அவருடைய இனத்தவருடன் தொடர்பு பெறுகின்றது என்ற நம்பிக்கையே முன்னோர் வழிபாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றது. இறந்த மூதாதையர்களின் ஆற்றலும் அனுபவமும் வாழ்வோரைச் செழுமைப்படுத்தும் என்ற நம்பிக்கையில் மூதாதையர்களை வழிபடுகின்றனர். இறந்தோரின் ஆசி என்றென்றும் வாழ்வோர்க்கு கிடைக்க வேண்டும் என முன்னோர்களை வழிபடுகின்றனர். இறந்தோரின் விருப்பங்களையும் அவருக்கு பிடித்தமானவற்றையும் நிறைவேற்றி அவரை வழிபடுதல் மூலம் தீய ஆற்றல்களில் இருந்து முன்னோர்கள் தப்ப வைப்பார்கள் என்றும் அவரும் சினம் கொள்ளாமல் அருள் குணத்துடன் ஆதரிப்பார் என்று நம்பி முன்னோருக்கு வழிபாடு செய்கின்றனர். (பக்தவத்சல பாரதி;ப.515)

யாத்திரை புதினத்தில் வருகின்ற குமரி, சந்தனமாரி, நாச்சியார் என்ற இம்மூவரும் நெய்தல் நில ஆதித்தமிழ்க்குடி மக்களின் முன்னோர்கள் ஆவர்.இவர்களை நெய்தல் நில மக்கள் யாவரும் வழிபடுகின்றனர்; ஆனால் கிறித்தவ மதத்திற்கு மாறியவர்கள் அவர்களை வணங்காமல் இருக்கின்றனர். இவர்களுக்காக வருந்துகிறார் புதின ஆசிரியர்.

**குமரி வழிபாடு: (முதல் கனவு):**

தம் முன்னோரின் குமரி பற்றிய தேடல் மனதிற்குள் இருந்து கொண்டே இருக்கிறது.இதற்கான பதில் கனவு வழி புதினத்தில் விளக்கப்பட்டுள்ளது. சிறுவன் தன் கனவில் **குமரி** கடவுளான நிகழ்ச்சியைப் பார்க்கிறான். தென்கடல் கோடியில் வில்வராயன் அரண்மனையில் அவரது மகளின் அரங்கேற்றம் ஒரு பௌர்ணமி அன்று நடந்தது . அவள் ஆடி முடிந்த சிறிது நேரத்தில் கடல் உள்வாங்குகிறது. அரண்மனையின் முன் மக்கள் ஓலமிட்டு நிற்கின்றனர். மன்னனும் செயலற்று நிற்கின்றான். நடனம் ஆடி முடித்த **குமரி** வெண்ணாடை தரித்து வெண்பூக்கள் சூடி கடலை நோக்கிச் செல்கிறாள். யாரும் அவளைத் தடுக்கவில்லை. ஓங்காரம் இட்டபடி வந்த அலைகள் நிலத்தை விழுங்க ஆர்ப்பரித்து வந்தன. குமரியானவள் தென்திசை நோக்கியே நடந்தாள். அலைகளை நோக்கி நடந்தாள். அவள் பாதம் பட்டதும் அலைகள் அமர்ந்து அடங்கின. கால் பட்டுக் கரைந்தன. ஆயினும் அவள் கடலோடு கலந்தாள். அவள் கடலோடு கலந்த போது தொடு வானில் கதிரவன் எழுந்தான். கெழுகடல் செல்வி என குலமகளைக் குலவை ஒலித்து வாழ்த்தினர் கரையில் இருந்த மக்கள். இவ்வாறு வில்வராயன் மகளான **குமரி** கடல் அலை நாட்டிற்குள் வராதபடி காத்தாள்.இப்போதும் காத்துக் கொண்டிருக்கிறாள். இந்நிகழ்ச்சியால் பரதவ மக்கள் யாவரும் வணங்கும் தெய்வம் ஆகிறாள் வில்வராயன் மகளான குமரி.இவரையே மக்கள் கன்னியாகுமரியாக இன்றும் வழிபடுகின்றனர்.கடல் அலை

கொந்தளித்து வரும்போது மக்களைக் காக்கும் தெய்வமாக நெய்தல் நில மக்கள் யாவரும் குமரி மை வணங்குகின்றனர்.ஆனால் கிறித்தவத்திற்கு மாறின மக்கள் குமரிக்கடவுளை வழிபடுவதை விட்டு விட்டனர் என்று ஆசிரியர் தம் இன மக்கள் மேல் குறைபட்டுக் கொள்கிறார்.

**மூன்று பெண் தெய்வங்கள்: (இரண்டாம் கனவு)**

தம் முன்னோர்கள் வழிவழியாக மூன்று பெண் தெய்வங்களை வழிபட்டனர். கிறித்தவத்திற்கு மாறின ஆதி தமிழ்க்குடி மக்களான இவர்கள் இத்தெய்வங்களை வழிபடவில்லை. இவர்கள் மூவரும் தம் இன முன்னோர்கள். இவர்களை வழிபடாமல் வேற்று நாட்டு மக்களின் (ரோமாபுரி பிஷப்) முன்னோர்களின் சிலைகளை வழிபடுகிறார்களே என்று ஆசிரியர் தம் உள்ளக் குமுறலைப் பதிவிட்டுள்ளார்.இவரது கனவில் கடற்கரை மக்களைக் காக்கும் தெய்வங்களான குமரி,சந்தனமாரி, நாச்சியார் ஆகியோரைப் பார்க்கிறான் சிறுவன். மூன்று மூதாட்டிகளும் திக்கற்று நின்ற சிறுவனைத் தம் மடியில் போட்டுத் தாலாட்டினர். அவர் ஒரு கடற்கரையில் நின்றிருந்தார் மாலை மயங்கிய வேளை அது. புயலுக்குப் பின்னான பேரமைதி அப்பிராந்தியத்தில் குடி கொண்டிருந்தது. கடல் நீரும் உள்வாங்கி பாறைகள் வெளித் தெரிந்தன. கச்சான் காற்றும் அசைவாடியபடி இருந்தது. தூரத்தில் மேற்கிலிருந்து கிழக்காக ஓடிக் கிடந்த பாறைக் கூட்டத்தின் மேல் அசைந்த மூன்று புள்ளிகள் உருவங்களாய் மாறி கரையை நோக்கி வந்தன. முக்காடு போட்டபடி மூன்று மூதாட்டிகள் வந்தார்கள் அவர்கள். அவர்களது முகங்களில் காலத்தின் வயோதிகச் சுருக்கங்கள்தெரிந்தது. ஒரு மூதாட்டியின் வலதுபுற மூக்கில், வைர மூக்குத்தி மின்னியது. இரண்டாமவளின் காதுகளில் பாம்படங்கள் தொங்கின. மூன்றாமவளோ முத்து மாலை அணிந்து இருந்தாள். அவர்கள் தங்களுக்குள் பேசியபடியே கரை நோக்கி வந்தார்கள். "நம் பிள்ளைகள் நம்மை மறந்துவிட்டன" என்றாள் மூக்குத்திக்காரி. "மாயையில் சிக்கித் தவிக்கிறார்கள் அவர்கள் நம்மை மறந்தாலும் நாம் அவர்களை என்றும் மறப்பதில்லையே " என்றாள் பாம்படத்தாள். கரையில் நம் பிள்ளை ஒன்று நிற்கிறதே "அவன் மூக்கை பார்த்தீர்களா ?அப்படியே உங்களுடையது" என கைநீட்டி சொன்னாள் முத்துமாலைக்காரி. "கண்களோ நம் தந்தையின் கண்கள்" என்றார்கள்.

வைர மூக்குத்தி அணிந்தவள் குமரி என்றும் பாம்படக்காரி நாச்சியார் என்றும் முத்துமாலைக்காரி சந்தனமாரி என்றும் அவரால் அவர்களை அடையாளம் காண முடிந்தது. அவர்கள் மூவரும் நெருங்கி வந்து அவரை மாறிமாறி தோளிலும் மடியிலும் போட்டு சீராட்டினார்கள். அவரும் மூவரின் மடியிலும் மாறி மாறி அமர்ந்து குழந்தை ஆனார். அவர்கள் அவரை உச்சி முகர்ந்து தாலாட்டுப் பாடினார்கள்.

ஆழ்கடலும் பொங்கினாலும்

சூறைக்காற்று வீசினாலும்

கொடுமழையே வந்திட்டாலும்

ஆத்தா நாங்கள் துணை இருப்போம்

அசராமக் கண்ணுறங்கு

ஆராரோ... ஆரிரரோ (பக்.106-107) புதினத்தில் சிறுவன் படித்துப் பெரியவனாகி வாழ்க்கையில் வேலையில்லா பிரச்சினை ஏற்பட்டுத் துயருற்ற வேளையில் இக்கனவைக் காண்கின்றான். மறுநாளே அப்பிரச்சினை நீங்கிக் கப்பல் துறைமுக வேலை கிடைக்கிறது.

**மோசஸ் பற்றிய கனவு:**

மூன்றாம் கனவு கிறித்தவ விவிலியத்திலுள்ள மோசஸ் பற்றியது.'மோசஸ் நெடுந்தோறும் நடந்து களைத்திருந்தார்.உடை கிழிந்து, உடல் மெலிந்து, கண்கள் பஞ்சாடின.பசிமயக்கத்தில் ஒரு பாறை அருகே நின்றிருந்த அவரது நாக்கு வறண்டிருந்தது. தன் கையில் இருந்த தடியால் பாறை மீது இரு முறை தட்டிப் பாறையை உற்றுப் பார்த்தார். தண்ணீர் வரவில்லை. எந்த திசை நோக்கி நடப்பது என்று தெரியாமல் இருந்த அவரைக் காற்று பின்னிருந்து தள்ளியது காற்று மோதி தழுவிய திசையிலேயே நடந்தார்...உச்சிப்பகுதியை அடைய இன்னும் சில தூரமே இருக்க தடுமாறிக் கீழே விழுந்தார். 'எனதுபலத்தால் அல்ல உனது சித்தமே நிறைவேறட்டும்' என இரு கைகளையும் உயர்த்திக் கும்பிட்டுச் சொன்னார். வெளிச்சத்தில் கண்கள் கூசிப் பஞ்சாடின. ஆனாலும் விடாது முகட்டை நோக்கித் தவழ்ந்தார். எழுந்து நிற்க முயன்று தோற்றுப் போனார். எதிரே கண் கொள்ளாக் காட்சி விரிந்தது பாலும் தேனும் பொழியும் கானான் தேசம் கண்முன்னால் இருந்தது. (ப.111-112) இக்கனவின்வழி ஜோடி குரூஸ் இஸ்ரவேல் மக்களை வழிநடத்திய மோசே போல ஆதி தமிழ்க்குடி

மக்களை வழிநடத்துபவராகத் தன்னை உருவாக்கிக் கொள்கிறார் எனலாம்.

**பேசாதன பேசுதல்:**

புதினத்தில் சிறுவனுடன் வேப்ப மரம்,கடல் அலை, காற்று ஆகியவை

பேசி அவன் மனதில் எழுத்தாளன் என்ற சிந்தனையை ஊன்றுகின்றன.

**வேப்ப மரம் பேசியது யாது?:**

வாடைக்கோதாலியால்(சூறாவளி) மரம் பாதிக்கப்பட்டிருந்த போது சிறுவன் வேப்ப மரத்தைத் தடவிக்கொடுத்த போது மரம் பேசியது.நெய்தல்நிலம் பற்றிப் பேசியது. தன்னைப் பற்றிப் பேசியது.அவ்வூர்க்கூட்டம் பற்றியும் பேசியது. இறுதியில் சிறுவனைப் பற்றிப் பேசியது.

இந்த ஊரில் பிறந்த ஒருவன் தான் இந்நாளில் இந்த மக்களின் பண்பாட்டை கலாச்சாரத்தை பொதுவெளியில் சொல்லப் போகிறான் அது நடக்கும். அவனை எனக்கு நன்றாக தெரியும் என்கிறது வேப்ப மரம். (ப.38) அச்சிறுவன் வருங்காலத்தில் தம் மக்களின் பண்பாட்டையும் விழுமியங்களையும் எழுதுவான் என்று கூறுகிறது. அச்சிறுவன் புதின ஆசிரியரே என யூகிக்க முடிகிறது.

**முதிய பாதிரியார்:**

சிறுவன் வளரும் நாட்களில் கத்தோலிக்க கோவிலிற்கு சென்று வழிபடுவதை நீதியாக கொண்டிருந்தான் அவனுக்கு கிறிஸ்தவ பாதிரியார் ஆக வேண்டும் என்ற ஆசை மனதில் துளிர் விட்டுக் கொண்டிருந்தது. முதிய பாதிரியார் வீட்டிற்கு ஒரு நாள் சென்றான். அவர் சிறுவனிடம் அன்பு கொண்டு பேசினார். அன்பு, அமைதி, கட்டுப்பாடு கொண்டவர்கள் நாங்கள் என்று சொல்லும் பாதிரிகள் பதவிக்காக பணியிடங்களுக்குச் சண்டையிட்டு கொள்கிறார்கள். இப்போதெல்லாம் அன்பு என்னும் அடிப்படை தகுதி இல்லாதவர்கள் பாதிரிகளாக ஆசைப்படுகிறார்கள்.மதத்தைப் பரப்புவது சிலருக்கு பிழைப்பாக மாறிவிட்டது. பாதிரிகள் தங்கள் சுய அறிவின்படி மறுபரிசீலனை செய்யாமல் கதைகளையும் சடங்குகளையும் செய்கிறார்கள். கருணை சகிப்புத்தன்மையற்ற உளறுவாயர்களான பாதிரிகளிடமிருந்து அன்பையும் பொறுமையையும் மௌனத்தையும் கற்றுக் கொள்ள முடியாது. துறவு என்பதே முழு உலகத்தையும் அதின் சுகங்களையும் நுகர்வதற்கான வாய்ப்பு என நினைக்கிறார்கள்.

சிறுவனே உன் கண்களில் தேடல் தெரிகிறது தேடல் உள்ளவர்களுக்கு உகந்த இடம் இதுவல்ல அப்பழுக்கற்ற உன் ஆன்மாவை மட்டும் கறை படாமல் எப்போதும் காத்துக் கொள் (பக்.42 - 45) என்று முதிய பாதிரியார் சிறுவனுக்கு அறிவுரை கூறுகிறார்.

**சந்நியாசி :**

ஒரு நாள் அந்த மரத்தடியில் நீண்டு வளர்ந்த தாடி மீசையோடு ஒரு சன்னியாசி அமர்ந்திருப்பதை சிறுவன் பார்த்தான். அவர் சன்னியாசியாக தான் இருக்க வேண்டும் என்பதை அவரது உடை காட்டியது. பரந்த நெற்றியில் விபூதி தோள் பையில் இருந்து காய்ந்த இலைகளை எடுத்து சுருட்டி புகைத்தபடியே இருந்தார். வாயிலிருந்து புகை வெளிவரும் போது அவரது பார்வை வானோக்கியிருந்தது. முகத்தில் இளநகை. அது கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வாழும் ஊராக இருந்தாலும் யாரும் அவரை விரோதியாகப் பார்த்தது போல் இல்லை. அன்று வழக்கம் போலவே வேப்ப மரத்தடியில் புகைத்தபடி இருந்தவர் தென் கிழக்காக நடந்து அலைவாய் கரைக்கு வந்திருந்தார் கைகளை ஆட்டியபடி கடலிடம் ஏதோ பேசினார் தோள் பையில் இருந்த விபூதி பொட்டனத்தில் இருந்து எடுத்து தன் காலடியில் கடலில் கரைத்தார். உடைகளைக்

கலைந்து விட்டு கோவணத்தோடு கடல் உள்ளே இறங்கி வெகு நேரம் கடலில் மிதந்த படியே இருந்தார். மிதவலான கச்சான் காற்று வீசியது. கடலில் இருந்து வெளியே வந்தவர் காய்ந்த மணலில் உருண்டு புரண்டார். அதைத் தூரத்திலிருந்து பார்த்த சிறுவன் மகுடியில் கட்டுண்ட பாம்பாக அவர் அருகே வந்தான் இன்னும் அருகில் வருமாறு கைகளை அசைத்தார் அவனது இரு கைகளையும் பிடித்து கண்களையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தார். வாஞ்சையோடு அவன் முதுகை வருடியவர் சொன்னார்.

"குமரியும் சந்தன மாரியும் நாச்சியாரும் நம்முடைய ஆத்தா மார்கள். ரத்தமும் சதையுமமான அந்த உறவை விட்டு விட்டோம் காலம் கனியும் போது இருக்கிறவராக எப்போதும் இருக்கிறவரின் எழுதுகோல் உன் கைக்கு வரும் மறைவான பல செய்திகள் உனக்கு வெளிப்படுத்தப்படும் இந்த மக்களில் சிலர் உன்னை பழித்துரைப்பார்கள். இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லி உன்னை முடக்கப் பார்ப்பார்கள் அது நடக்காது. ஒரு நாள் இழித்துரைத்தவர்களே உன்னைத் தேடி வருவார்கள்" …என்று கூறி

சந்நியாசி தோள் பையில் இருந்த விபூதியை எடுத்து அவனது முகத்தில் ஊதினார். சந்நியாசி வழியாக சிறுவன் 'வரும் காலத்தில்

எழுத்தாளன் ஆவான்' என்பது சொல்லப்பட்டுள்ளது. அப்போது உனக்கு மறைபொருள்கள் உணர்த்தப்படும்.உறவினர்கள் முதலில் உன்னைப் பழித்தாலும் சிறிது நாள் கழித்து உன்னைப் புகழ்வர். நீ எழுதிப் புகழ் பெறுவாய் என்று கூறி ஆசீர்வதிக்கிறார்.(பக்.40 - 41)

**முடிவுகள் :**

யாத்திரை புதினத்தில் நெய்தல் நில ஆதி தமிழ்க்குடி மக்களான பரதவர்கள் கிறித்துவத்துக்கு மாறி இருந்தாலும் அவர்களின் நினைவு அடுக்குகளின் ஆழ் மனதில் நெய்தல் தாய்த்தெய்வத்தின் மீதான நம்பிக்கையும் பூர்வீக மதத்தின் மீதான ஏக்கமும் நிறைந்துள்ளன.

சிறுவனின் தேடலில் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் பாவசங்கீர்த்தனம் செய்வது அவர்களது அறியாமை என்றும் பாவசங்கீர்த்தனம் செய்யத் தேவையில்லை என்றும் யாத்திரைப் புதினச் சிறுவன் சிந்திக்கிறார். கத்தோலிக்கச் சமயம் சிதறிக் கிடந்த நெய்தல் நிலப் பரதவர்களை ஐக்கியப்படுத்திய பெருமையைத் தன்னகத்தே கொண்டிருந்தாலும் அங்கு மேற்கொள்ளப்படும் சில அடக்குமுறைகளும் சமயம் சார்ந்த சில சட்ட திட்டங்களும் வரி கொடுத்தலும் அது சார்ந்த நியதிகளும் இம்மக்களைப் பெரிதும் வஞ்சிப்பதாகக் காட்சிப் படுத்தியுள்ளார்.ரோமாபுரி பிஷப் போன்றோரின் சிலைகளை வழிபடுதல்,பாவசங்கீர்த்தனம் செய்தல் ஆகியவற்றால் மக்கள் வஞ்சிக்கப்பட்டு உள்ளனர்; வளமார்ந்த ஆதி சமூகத்தின் நினைவடுக்குகளில் உள்ள பெண் தெய்வங்களான குமரி, சந்தனமாரி, நாச்சியார் இவர்களே கடல்வாழ் மக்களின் முன்னோர்கள்;

இவர்களை வழிபட வேண்டும். கிறித்தவர்களாக மாறிய பின் முன்னோர்களை வழிபடாமல் இருப்பது வேரற்ற வாழ்க்கை என்ற தம் கருத்தை உணர்த்தியுள்ளார்.நமது பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதற்கு நமது வேர்களைத் தேடிப் பயணிக்க வேண்டும்.இந்த வேர் நமது மூதாதையர் உடனான உறவைப் புதுப்பிப்பதாகும்.

**துணைநூற்பட்டியல்:**

1.ஆர்என் ஜோ டி குரூஸ்,யாத்திரை,காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்.

2.ஆர்என் ஜோ டி குருஸ்,ஆழி சூழ் உலகுகாலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்

3.ஆர்என்ஜோடி குருஸ்,கொற்கை,காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்

4.பக்தவத்சல பாரதி,பண்பாட்டு மானுடவியல்,மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம் -608001.

5.சமஸ்,நீர் நிலம் வனம் கடல்,தி இந்து வெளியீடு, சென்னை.

*References:*

*1.RN Joe D Cruz, Yatra, Kalachuvadu Publishing House, Nagercoil.*

*2.RN Joe D Cruz, Azhi Suzh Ulaku Kalachuvadu Publishing House, Nagercoil*

*3.RN Jodi Cruz, Korkai, Kalachuvadu Publishing House, Nagercoil*

*4.Bhaktavatsala Bharathi, Cultural Anthropology, Meiyappan Publishing House, Chidambaram -608001.*

*5.Samas, Neer Nilam Vanam Kadal, The Hindu Publication, Chennai.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com